# இந்திய துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்
## ஊடக அறிக்கை

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவினை முன்னிட்டு யாழ் இந்தியத் துணைத்தூதரகமானது இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் மற்றும் (ICCR) வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து தெய்வீக சுகானுபவம் - 8 நிகழ்வினை வழமை போன்று இவ் வருடமும் 14,15 மற்றும் 16ம் திகதிகளில் ஏற்பாடு செய்துள்ளது.

2. அதன் ஓர் அங்கமாக நேற்றைய தினம் (14.08.2019 புதன் கிழமை) காலை 11.00க்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் முனைவர் பரிமள் அசோக் பட்கே அவர்களின் பரதநாட்டிய பயிற்சிப் பட்டறை இடம் பெற்றது.

3. யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு பாலச்சந்திரன், யாழ் பல்கலைக்கழக கலைத்துறைத் தலைவர் முனைவர் சுதாகர், வடமாகாண கலை பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் சுஜீவா சிவதாஸ், , வடமாகாண கல்வி அமைச்சின் கலாச்சார உத்தியோகத்தர்கள் முன்னிலையில் மூத்த கலைஞர்கள் நடன ஆசிரியர்கள் யாழ் பல்கலைகழக நடனத்துறை மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் என பலர் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

4. முனைவர் பரிமள் அசோக் பட்கே அவர்கள் தனது மாணவிகளுடன் பயிற்சிப் பட்டறையில் பங்குகொண்ட மாணவர்களையும் இணைத்து நடன நுட்பங்களினை பயிற்றுவித்தார். இதில் மிகுந்த உற்சாகத்துடன் மாணவர்கள் பங்கெடுத்து பயனடைந்தனர்.

5. அதனைத் தொடர்ந்து மாலையில் நல்லூர் சங்கிலியன் தோப்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் யாழ் சாக்ஸபோன் சகோதரர்களின் சாக்ஸபோன் இசை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து முனைவர் பரிமள் அசோக் பட்கே அவர்களின் நடன அளிக்கையும் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ் இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டார். இரு கலை நிகழ்வுகளும் பார்வையார்களின் கண்களுக்கும் மனங்களுக்கும் விருந்தளித்தன. வடமாகாண பிரதம செயலாளர் திரு பத்திநாதன், வடமாகாண ஆளுனரின் செயலாளர் திரு சத்தியசீலன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன், யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு ஜெயசீலன், வடமாகாண கலை பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் சுஜீவா சிவதாஸ், தூதரக அதிகாரிகள், கல்வி அமைச்சின் அலுவலர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், நடன ஆர்வலர்கள் என இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

6. நிகழ்வில் உரையாற்றிய யாழ் இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் அவர்கள் தெய்வீக சுகானுபவம் நிகழ்வில் பங்குபற்றிய கலைஞர்களைப் பட்டியலிட்டதுடன் அவர்களைப்போன்று உள்ளூர் கலைஞர்களும் உலக அளவில் கலைத்துறையில் புகழ் பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

7. நிகழ்வில் உரையாற்றிய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் அவர்கள் இந்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் இக் கலைநிகழ்வுக்காக தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதுடன் தொடர்ந்தும் யாழ் இந்தியத் துணைத் தூதரகம் இவ்வாறான கலைத்துறை சார்ந்த பணிகளை மேற்க் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

8. நிகழ்வில் பங்கேற்ற உள்ளூர் கலைஞர்கள் மற்றும் இந்தியக் கலைஞர்கள் மாலை அணிவித்து நினைவு சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

9. உள்ளூர் ஊடகவியலாளர்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.